www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

திருவண்ணாமலை மாவட்டம்.

# காலாண்டுத் தேர்வு - 2024

**12** - ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் : 1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளனவா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளவும். 2) குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். 3) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.**

14 X 1= 14

1. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம் அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

2. கவிதையின் ............. நடை அ) இயங்காற்றல்தான் ஆ) அழகுதான் இ) பார்வைதான் ஈ) இயல்புதான்

3. பிழையான தொடரைக் கண்டறிக. அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
ஆ) மலைமீது ஏரிக் கல்வெட்டுகளை கண்டறிந்தனர்
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீச்சியது ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின

4. கடலின் பெரியது
அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி ஈ) இவையனைத்தும்

5. 'காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் ........ பயின்று வந்துள்ளது.
அ) பயன்படிமம் ஆ) வினைப்படிமம்
இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

6. புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே? என்றவர்
அ) டேவிட் கிங் ஆ) ஜான் டேவிட் இ) ஜான் மார்ஷல் ஈ) ஹென்றி

7. 'உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்' - இத்தொடர் உணர்த்தும் பண்பு
அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு
இ) முரண்பண்பு ஈ) இவை அனைத்தும்

8. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைத்து உணர்த்தும் திணைகள் முறையே ....................
அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

9. உவமைக்கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர்
அ) சுரதா ஆ) வெ.ராமலிங்கனார் இ) அப்துல் ரகுமான் ஈ) மு.மேத்தா

10. வெண்பாவின் ஓசை
அ) அகவலோசை ஆ) செப்பலோசை இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

11. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்

இ) மழைத் துளிகள் ஈ) நீர்நிலைகள்

12. குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல் ........... .

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

13. முதல்கல் சிறுகதையின் ஆசிரியர்

அ) புதுமைப்பித்தன் ஆ) உத்தமசோழன்

இ) ஜானகிராமன் ஈ) சுஜாதா

14. தமிழில் திணைப்பாகுபாடு ......... அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு

இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

**அ) கீழ்வரும் வினாக்களுக்கு எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்.** 3 X 2 = 6

15. சினத்தை ஏன் காக்க வேண்டும்?

16. "நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது" விளக்கம் தருக.

17. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.

18. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' யாருக்கு?

**ஆ) கீழ்வரும் குறுவினா எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** 2 X 2 = 4

19. இயல்பு வழக்குகளை கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?

20. எழுத்தாணியின் வகைகள் யாவை?

21. சிலம்புகழி நோன்பு - விளக்குக.

**III எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. வல்லின மெய்யை இட்டும் நீக்கியும் எழுதுக.

மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக் கொள்ள வேண்டும் தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

23. **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

தலை, தளை, தழை

24. **தொடரிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) அப்பசி அடமழையில் ஊருனி நிறைந்தது.

ஆ) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

25. ***ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பகுபத உறுப்பிலக்கணம் தருக.***

அ) விம்முகின்ற ஆ) தந்தனன்

26. ***கலைச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.***

அ) Visa ஆ) Departure

27. **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

அ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

28. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) தனியாழி ஆ) பூம்பாவாய்

29. **ஏதேனும் ஒன்றிற்கு சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.**

அ) கோவில் ஆ) பலகை

30. **இலக்கணக் குறிப்பு தரு.**

அ) வெங்கதிர் ஆ) மாமயிலை

**IV அ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 x 4 = 8

31. 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருள்கற்றும்' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

32. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினார்?

33. எவற்றையெல்லாம விட நன்றி உயர்ந்தது? - குறள் வழி விளக்கு.

34. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 x 4 = 8

35. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும்? விளக்குக.

36. நீவிர் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்?

37. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

38. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்திருப்பனவற்றைக் குறிப்பிடுக.

**V எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 x 4 = 12

39. ஏகதேச உருவக அணியை சான்றுடன் விளக்குக. ***(அல்லது)***

நெய்தல் திணையின் முதல், உரி, கருப்பொருள்களை அட்டவணைப்படுத்துக.

40. ***பா நயம் பாராட்டுக மையக்கருத்தை எழுதி எவையேனும் மூன்று நயங்களை எழுதுக.***

*பிறப்பினால் எவர்க்கும் - உலகில்*
*பெருமை வாராதப்பா!*
*சிறப்பு வேண்டுமெனில் - நல்ல*
*செய்கை வேண்டுமப்பா!*
*நன்மை செய்பவரே - உலகம்*
*நாடும் மேற்குலத்தார்!*
*தின்மை செய்பவரே - அண்டித்*
*தீண்ட ஒண்ணாதார்*

***- கவிமணி தேசிக விநாயகம்.***

41. **தமிழாக்கம் தருக.**

அ) A new language is a new life.

ஆ) Knowledge of language is the doorway to wisdom.

இ) The limits of my language are the limits of my world.

ஈ) Learning is a treasure that wil follow its owner everywhere.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**2) காதுகேளாதோர்க்கான மாற்று வினா பத்தியைப் படித்து விடையளிக்கவும்.**

இயல்பாகவே பெருமழையைத் தாங்கக்கூடிய குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால் வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள் போன்ற ஏற்பாடுகளை இயற்கை அமைத்திருக்கிறது. நாம் இந்த அமைப்பில் இடையீடு செய்து நீர்நிலைகளை அழித்து குடியிருப்புகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றை உருவாக்கிக் கொள்கிறோம். நெகிழி மற்றும் திடக்கழிவுகளைக் கொட்டி நீர்வழிப்பாதைகளைக் குறுக்கி வெள்ளச் சமவெளிகளை இல்லாமல் செய்துவிடுகிறோம். இதன் விளைவாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உயிர், உடைமை இழப்புகள் ஏற்படுகின்றன. பெருமழை காலங்களில் நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

**வினாக்கள் :**

1) பெருமழையைத் தாங்க இயற்கை தந்த அமைப்புகள் யாவை?

2) பெருமழையைத் தாங்க இயற்கை தந்த அமைப்பில் நாம் செய்யும் இடையீடுகள் யாவை?

3) நம்முடைய எத்தகைய செயல்பாடுகளால் வெள்ளச் சமவெளிகளை இல்லாமல் செய்கிறோம்.

4) வெள்ளச் சமவெளிகளை அழிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் யாவை?

5) பெருமழைக் காலங்களில் நகரம் வெள்ளத்தில் மிதப்பதற்கான காரணத்தை விளக்குக.

42. அ) வெண்பாவின் இலக்கணம் யாது? ***(அல்லது)***

ஆ) "சுடர்விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்" - என்னும் பழமொழியினை நும் வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

43. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு கவிதை எழுதுக.

செந்தமிழ் ***(அல்லது)*** நிலா

**VI அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 x 6 = 18

44. அ) சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப்பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன? ***(அல்லது)***

ஆ) பண்பின் படிமமாக படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. ***(அல்லது)***

ஆ) பண்டையக் காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க. ***(அல்லது)***

ஆ) "சாலை விபத்து ஏற்படுவதற்கான காரணங்களையும் அவற்றைத் தவிர்க்கும் வழிகளையும் எழுதுக.

**VII மனப்பாடப்பகுதி.** 4 + 2 = 6

47. அ) 'ஒருமையுடன்" - எனத் தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) 'அரிது' - என முடியும் திருக்குறளை எழுதுக.



Scanned with OKEN Scanner

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com